www.Padasalai.Net

Padasalai Official – Android App – Download Here

படங்களை தொடுக! பாடசாலை வலைதளத்தை சமூக ஊடகங்களில் பின்தொடர்க!! உடனுக்குடன் புதிய செய்திகளை Notifications-ல் பெறுக!

You Tube

Zoom Touch Below Links Download!

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 12th Standard | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11th Standard | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | Centum Questions | Creative Questions | |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10th Standard | Syllabus | Books | Study Materials - EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NTSE | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **9th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Quarterly Exam | Half Yearly Exam | Annual Exam | RTE | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **8th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | NMMS | Periodical Test |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **7th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **6th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **1st to 5th Standard** | Syllabus | Books | Study Materials | Periodical Test | SLAS | |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Exams** | TET | TNPSC | PGTRB | Polytechnic | Police | Computer Instructor |
| | DEO | BEO | LAB Asst | NMMS | RTE | NTSE |

| | | | |
|---|---|---|---|
| **Portal** | Matrimony | Mutual Transfer | Job Portal |

| | | | |
|---|---|---|---|
| **Volunteers** | Centum Team | Creative Team | Key Answer Team |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Downloads** | LESSON PLAN | Department Exam | Income Tax | Forms & Proposals | Fonts | Downloads |
| | Proceedings | GO's | Regulation Orders | Pay Orders | Panel | |

**Padasalai – Official Android App – Download Here**

**Kindly Send Your Study Materials, Q&A to our Email ID** – Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
www.surabooks.com

10 ஆம் வகுப்பு

# அரசு துணைத்தேர்வு, செப்டம்பர் - 2020

பதிவு எண்.

## Part - III

## சமூக அறிவியல் (விடைகளுடன்)

கால அளவு : 3.00 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறைபாடு இருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** இவ்வினாத்தாள் நான்கு பகுதிகளைக் கொண்டது.

### பகுதி - I

**குறிப்பு:** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

(ii) கொடுக்கப்பட்ட **நான்கு** விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். **(14 × 1 = 14)**

**1.** எத்தியோப்பியாவின் படைகள் இத்தாலியின் படைகளை எவ்விடத்தில் தோற்கடித்தது?

(அ) டெல்வில்லி (ஆ) ஆரஞ்சு நாடு
(இ) அடோவா (ஈ) அல்ஜியர்ஸ்

**2.** ஐக்கிய நாடுகள் சபையின் பட்டய சாசனம் கையெழுத்தான நாள் :

(அ) ஜுன் 26, 1942 (ஆ) ஜுன் 26, 1945
(இ) ஜனவரி 1, 1942 (ஈ) ஜனவரி 1, 1945

**3.** 'சத்யார்த்த பிரகாஷ்' எனும் நூலின் ஆசிரியர் :

(அ) சுவாமி தயானந்த சரஸ்வதி
(ஆ) ஆத்மராம் பாண்டுரங்
(இ) அன்னி பெசன்ட்
(ஈ) தேவேந்திரநாத்

**4.** எந்த கிளர்ச்சியின் பின்னணியில் சோட்டா நாக்பூர் குத்தகைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது ?

(அ) கோல் கிளர்ச்சி
(ஆ) இண்டிகோ கிளர்ச்சி
(இ) முண்டா கிளர்ச்சி
(ஈ) தக்காண கலவரங்கள்

**5.** **கூற்று** : காங்கிரஸ் அமைச்சரவைகள் 1939 ஆம் ஆண்டு பதவி விலகின.

**காரணம்** : காங்கிரஸ் அமைச்சரவைகளை ஆலோசிக்காமல் இந்தியாவின் காலனி ஆதிக்க அரசு போரில் பங்கேற்றது.

(அ) **கூற்று** மற்றும் **காரணம்** இரண்டும் சரியானது. ஆனால் **காரணம்** கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை.
(ஆ) **கூற்று** சரியானது, ஆனால் **காரணம்** தவறானது.
(இ) **கூற்று** மற்றும் **காரணம்** இரண்டுமே தவறானது.
(ஈ) **கூற்று** மற்றும் **காரணம்** இரண்டுமே சரியானது மற்றும் **காரணம் கூற்றுக்கான** சரியான விளக்கம் ஆகும்.

**6.** பொருந்தாததைத் தேர்ந்தெடுக்கவும்:

(அ) கொல்லேறு ஏரி (ஆ) வேம்பநாடு ஏரி
(இ) சிலிகா ஏரி (ஈ) பழவேற்காடு ஏரி

**7.** பொன் புரட்சி எந்த வேளாண் பொருள் உற்பத்தியுடன் தொடர்புடையது?

(அ) உருளைக் கிழங்கு
(ஆ) எண்ணெய் வித்துக்கள்
(இ) தேன் (ஈ) சணல்

**8.** தேசிய காற்றாற்றல் நிறுவனம் அமைந்துள்ள இடம் :

(அ) ஃபரிதாபாத் (ஆ) சென்னை
(இ) கன்னியாகுமரி (ஈ) விழிஞ்சம்



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
www.surabooks.com



**9.** பின்னடையும் பருவக்காற்று எந்த கடலிலிருந்து ஈரப்பதத்தை எடுத்துக் கொள்கிறது?

(அ) அரபிக் கடல் (ஆ) வங்கக் கடல்
(இ) இந்தியப் பெருங்கடல் (ஈ) தைமூர்க் கடல்

**10.** பேரிடர் அவசர கால தொலைபேசி எண்.................

(அ) 1095 (ஆ) 1944
(இ) 1098 (ஈ) 1077

**11.** பின்வருவனவற்றுள் எந்த உரிமை Dr. B.R. அம்பேத்கர் அவர்களால் "இந்திய அரசியல் அமைப்பின் இதயம் மற்றும் ஆன்மா" என விவரிக்கப்படுகிறது?

(அ) சமய உரிமை
(ஆ) சமத்துவ உரிமை
(இ) அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை
(ஈ) சொத்துரிமை

**12.** புதிதாக சுதந்திரமடைந்த பாகிஸ்தானுக்கான எல்லைகளை வகுத்தவர் :

(அ) மவுண்ட்பேட்டன் பிரபு
(ஆ) சர் சிரில் ராட்கிளிஃப்
(இ) கிளமெண்ட் அட்லி
(ஈ) கான் அப்துல் கஃபார் கான்

**13.** ஒரு நல்ல பொருளாதாரம் இதனின் விரைவான வளர்ச்சிக்காக அறிமுகப்படுத்தப்படுகிறது :

(அ) பண மானியங்கள்
(ஆ) மூலதன சந்தை
(இ) வரி சலுகைகள்
(ஈ) சொத்து உரிமைகள்

**14.** சரியில்லாத கூற்றைத் தேர்ந்தெடுக்கவும் :

(i) இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ பண்டங்களின் பற்றாக்குறை கருப்பு பணத்திற்கு மூலக் காரணமாகும்.
(ii) கருப்பு பணம் தோன்றுவதற்கு மிக முக்கிய பங்கு வகிப்பது தொழிற்துறையாகும்.
(iii) கருப்பு பணம் உருவாவதற்கு கடத்தல் ஒரு முக்கிய மூலமாகும்.
(iv) வரி விகிதம் குறைவாக இருக்கும் போது அதிக கருப்பு பணம் தோன்றுகிறது.

(அ) (i) மற்றும் (ii) மட்டும் (ஆ) (iv) மட்டும்
(இ) (i) மட்டும்
(ஈ) (ii) மற்றும் (iii) மட்டும்

## பகுதி - II

**குறிப்பு :** எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 28-க்கு கட்டாயமாக விடையளிக்கவும். (10 × 2 = 20)

**15.** ரஷ்யப் புரட்சியின் உலகளாவிய தாக்கத்தினைக் கோடிட்டுக் காட்டுக.

**16.** முத்துத் துறைமுக நிகழ்வை விவரிக்கவும்.

**17.** சுவாமி விவேகானந்தரின் 'செயல்பாட்டாளர்' சித்தாந்தத்தின் தாக்கமென்ன?

**18.** ஆங்கிலேய இந்தியாவில் விவசாயிகளின் கிளர்ச்சி எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன?

**19.** திருப்பூர் குமரனின் வீரமரணம் குறித்து சிறு குறிப்பு வரைக.

**20.** பருவமழை வெடிப்பு என்றால் என்ன?

**21.** கலப்பு வேளாண்மை என்றால் என்ன?

**22.** தகவல் தொடர்பு என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

**23.** கடல் பாதுகாப்பு மேலாண்மையில் சதுப்பு நிலத்தாவரங்களின் பங்கு என்ன?

**24.** இந்தியக் குடியரசுத் தலைவர் எவ்வாறு யாரால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்?

**25.** பிரிக்ஸ் (BRICS) கூட்டமைப்பு உருவானதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.

**26.** GDP-யில் பங்களிப்புள்ள துறைகளை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

**27.** வளர்வீத வரி என்றால் என்ன?

**28.** நமது இந்திய நாட்டின் வெளியுறவு கொள்கையின் முக்கிய நோக்கங்கள் யாவை?

## பகுதி - III

**குறிப்பு :** எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 42-க்கு கட்டாயமாக விடையளிக்கவும். (10 × 5 = 50)

**29.** கோடிட்ட இடங்களை நிரப்புக :

(i) இலத்தீன் அமெரிக்கா, அமெரிக்காவின்________ ஐ விரும்பவில்லை.
(ii) அல்பைன் காடுகளில் காணப்படும் மரங்கள், ______ மரங்கள் என அழைக்கப்படுகின்றன.
(iii) இறக்குமதி மற்றும் ஏற்றுமதி மதிப்புகளுக்கு இடையிலுள்ள வேறுபாடு ______ என அழைக்கப்படுகிறது.
(iv) இந்தியா தனது முதல் அணு சோதனையை நடத்திய இடம்______ .
(v) அமெரிக்காவிலிருந்து ______ அமைப்பு இந்தியாவில் HYV-ஐ அறிமுகப்படுத்தியது.

www.Padasalai.Net www.CBSEtips.in
www.surabooks.com



**30.** வேலு நாச்சியார் பற்றி விரிவாக விடையளிக்கவும்.

**31.** முதல் உலகப் போருக்கான முக்கியக் காரணங்களை விவாதிக்கவும்.

**32.** (அ) வேறுபடுத்துக.

(i) வேளாண் சார்ந்த மற்றும் கனிமம் சார்ந்த தொழிலகங்கள்.

(ii) சாலைவழி போக்குவரத்து மற்றும் இரயில் வழி போக்குவரத்து

(ஆ) காரணம் கூறுக : கிழக்கு தொடர்ச்சி மலையானது தொடர்ச்சியற்ற குன்றுகளாகும்.

**33.** ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு மற்றும் செயல்பாடுகளை ஆய்வு செய்க.

**34.** 1857-ஆம் ஆண்டின் பெருங்கலகத்தின் தோல்விக்கான காரணங்களை எழுதுக.

**35.** இந்தியாவின் கிழக்கு மற்றும் மேற்கு கடற்கரைச் சமவெளிகளைப் பற்றி விளக்குக.

**36.** நகரமயமாக்கம் என்றால் என்ன? அதன் தாக்கங்களை விளக்குக.

**37.** ஆளுநரின் பல்வேறு அதிகாரங்கள் பற்றி விவரிக்கவும்.

**38.** அண்டை நாடுகளுடன் நட்புறவினைப் பேண இந்தியா பின்பற்றும் வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கருத்துக்களைப் பட்டியலிடுக.

**39.** உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக.

**40.** இந்தியாவின் வேளாண் கொள்கையின் சில முக்கிய நோக்கங்களை சுருக்கமாக எழுதுக.

**41.** கீழ்க்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக:

1920 முதல் 1940 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட முக்கிய ஐந்து நிகழ்வுகளைக் காலக்கோட்டில் எழுதுக.

**42.** இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களை குறிக்கவும்.

(i) மீரட்
(ii) பாரக்பூர்
(iii) தண்டி
(iv) சௌரி சௌரா
(v) வேதாரண்யம்

## பகுதி - IV

**குறிப்பு :** பின்வரும் **வினாக்களுக்கு** விடையளிக்கவும். **(2 × 8 = 16)**

**43.** (அ) (i) ஹோ சி மின் பற்றியும் வியட் மின் கட்சியின் உதயம் பற்றியும் குறிப்பு வரைக.

(ii) இராமலிங்க சுவாமிகளின் வாழ்க்கை மற்றும் போதனைகள் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) இந்தியாவில் காந்தியடிகள் நடத்திய தொடக்கக்கால சத்தியாகிரகங்களை விளக்குக. அவற்றின் விளைவு யாது?

**44.** (அ) **கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.**

(i) K2 சிகரம்
(ii) கரிசல் மண் பகுதி ஒன்று
(iii) மும்பை ஹை
(iv) பாக் நீர் சந்தி
(v) கட்ச் வளைகுடா
(vi) நெய்வேலி
(vii) சோழமண்டல கடற்கரை
(viii) சென்னையிலிருந்து கொல்கத்தா வரை செல்லும் இரயில் பாதை

(அல்லது)

(ஆ) **கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.**

(i) சென்னை
(ii) தொட்ட பெட்டா
(iii) கன்னியாகுமரி
(iv) சேலம்
(v) காவிரி ஆறு
(vi) மன்னார் வளைகுடா
(vii) அகத்தியர் மலை
(viii) வங்காள விரிகுடா

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
www.surabooks.com



## விடைகள்

### பகுதி - I

1. (இ) அடோவா
2. (ஆ) ஜுன் 26, 1945
3. (அ) சுவாமி தயானந்த சரஸ்வதி
4. (இ) முண்டா கிளர்ச்சி
5. (ஈ) **கூற்று** மற்றும் **காரணம்** இரண்டுமே சரியானது மற்றும் **காரணம் கூற்றுக்கான** சரியான விளக்கம் ஆகும்.
6. (ஆ) வேம்பநாடு ஏரி
7. (இ) தேன்
8. (ஆ) சென்னை
9. (ஆ) வங்கக் கடல்
10. (*) 1078
11. (இ) அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை
12. (ஆ) சர் சிரில் ராட்கிளிஃப்
13. (ஆ) மூலதன சந்தை
14. (ஆ) (iv) மட்டும்

### பகுதி - II

15. ரஷ்ய கம்யூனிஸ்ட் அரசு காலனி நாடுகளை விடுதலைக்காக போராட ஊக்குவித்து அவர்களுக்கு முழுமையாக ஆதரவையும் நல்கியது. நிலச்சீர்திருத்தம், சமூகநலன், தொழிலாளர் உரிமைகள், பாலின சமத்துவம் போன்ற இன்றியமையாதவை குறித்த விவாதங்கள் உலகஅளவில் நடைபெறத் தொடங்கின.

16. (i) 1941 டிசம்பரில் ஹவாயிலுள்ள அமெரிக்கக் கப்பற்படைத்தளமான முத்துத் துறைமுகத்தின் மீது ஜப்பானிய விமானப்படைகள் முன்னறிவிப்பின்றி பெருந்தாக்குதலைத் தொடுத்தன.
(ii) அமெரிக்காவின் பசிபிக் கப்பற்படையை முடக்கிவிட்டால் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மீது படையெடுக்கும் போது எதிர்ப்பேதும் இருக்காது என ஜப்பான் நினைத்ததே இதற்குக் காரணமாகும். இத்தாக்குதலில் பல போர்க்கப்பல்களும் போர் விமானங்களும் அழிக்கப்பட்டன. அமெரிக்க வீரர்கள் பலர் கொல்லப்பட்டனர்.
(iii) இதனைத் தொடர்ந்து அமெரிக்கா ஜப்பான் மீது போர்ப் பிரகடனம் செய்தது.
(iv) மிக முக்கியமாக இத்தாக்குதல் பெருமளவிலான வளங்களைக் கொண்டிருந்த அமெரிக்க நாட்டை நேசநாடுகளின் அணியில் இப்போரில் பங்கேற்க வைத்தது.

17. (i) சுவாமி விவேகானந்தர் பண்பாட்டுத் தேசியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்த அவர் இந்து சமூகத்திற்குப் புத்துயிரளிக்க இந்திய இளைஞர்களுக்கு அறைகூவல் விடுத்தார்.
(ii) விவேகானந்தரின் செயலூக்கம் மிக்க சித்தாந்தம் மேலைக்கல்வி பயின்ற வங்காள இளைஞர்களிடையே அரசியல் மாற்றங்களுக்கான நாட்டத்தை வங்கப்பிரிவினையைத் தொடர்ந்து நடைபெற்ற சுதேசி இயக்கத்தின் போது இளைஞர்களில் பலர் விவேகானந்தரால் ஊக்கம் பெற்றனர்.

18. ஆங்கிலேய ஆட்சியில் கிட்டத்தட்ட ஒரு நூறுக்கும் குறையாத எண்ணிக்கையில் விவசாயிகளின் கிளர்ச்சிகள் நடந்தன. அவற்றை கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.
அ) மறுசீரமைத்தலுக்கான கிளர்ச்சிகள்
ஆ) சமய இயக்கங்கள்
இ) சமூகக்கொள்கை
ஈ) மக்களின் கிளர்ச்சி

19. **திருப்பூர் குமரனின் வீரமரணம் :**
(i) 1932 ஜனவரி 11இல் திருப்பூரில் கொடிகளை ஏந்திய வண்ணம் நாட்டுப்பற்று மிகுந்த பாடல்களைப் பாடிச் சென்ற ஊர்வலத்தினர் காவல்துறையினரால் இரக்கமின்றி அடித்து உதைக்கப்பட்டனர்.
(ii) திருப்பூர் குமரன் தேசியக் கொடியை உயர்த்திப் பிடித்தவாறே விழுந்து இறந்தார். ஆகையால் இவர் கொடிகாத்த குமரன் எனப் புகழப்படுகிறார்.

20. (i) தென்மேற்கு பருவக்காற்று தொடங்குவதற்கு முன் வட இந்தியாவின் வெப்பநிலையானது 46°C வரை உயருகிறது.
(ii) இப்பருவக்காற்றின் இடி மற்றும் மின்னலுடன் கூடிய துவக்கம் (தென் இந்தியாவில்) “பருவமழை வெடிப்பு” எனப்படுகிறது.

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
www.surabooks.com



**21.** **கலப்பு வேளாண்மை** : கலப்பு வேளாண்மை என்பது பயிரிடுதலுடன் கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு போன்றவற்றை உள்ளடக்கியதாகும். விவசாயிகளின் பல தேவைகளை இது பூர்த்தி செய்கிறது.

**22.** தகவல்கள், எண்ணங்கள் மற்றும் கருத்துக்களின் பரிமாற்றத்தையே தகவல் தொடர்பு என்கிறோம். தகவல் தொடர்பு துறையில் தொழில் நுட்பம் வியக்கத்தக்க வகையில் உள்ளது. தகவல் தொடர்புகள் இரு பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. அவை
(i) தனிமனித தகவல் தொடர்பு.
(ii) பொதுத் தகவல் தொடர்பு.

**23.** கடல் அலைகள் மற்றும் புயலால் ஏற்படும் பாதிப்பில் இருந்து கடற்கரைப் பகுதிகளை பாதுகாக்கின்றது. மேலும் பவளப்பாறைகளையும், கடலோர புல்வெளிகளையும் மணல் படிவுகளால் மூழ்கடிக்கப்படாமல் சதுப்பு நிலத் தாவரங்கள் பாதுகாக்கின்றன.

**24.** (i) குடியரசுத்தலைவர், ஒற்றை மாற்று வாக்கு மூலம் விகிதாச்சார பிரதிநிதித்துவத்தின்படி வாக்காளர் குழுமத்தால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
(ii) வாக்காளர் குழுமம் என்பது மாநிலங்களவை மற்றும் மக்களவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், அனைத்து மாநில சட்டமன்ற உறுப்பினர்கள். தேசிய தலைநகர் டெல்லி, மற்றும் புதுச்சேரியின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஆகியோரை உள்ளடக்கியதாகும்.

**25.** **பிரிக்ஸ் கூட்டமைப்பு உருவாவதற்கான காரணம் :** உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்திற்கு ஒரு மாற்றாகவும், அமெரிக்க மேலாதிக்கத்திற்குப் போட்டியாகவும், உறுப்பு நாடுகளிடையே பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றவும் பிரிக்ஸ் நாடுகள் கூட்டமைப்பு தோற்றுவிக்கப்பட்டது.

**26.**
- ✦ வேளாண்மைத் துறை
- ✦ விவசாயம், காடுகள் மற்றும் மீன் பிடித்தல்
- ✦ தொழில்துறை
- ✦ சுரங்கம் மற்றும் குவாரி
- ✦ உற்பத்தி
- ✦ மின்சாரம், எரிவாயு, நீர் வழங்கல் பிற பயன்பாட்டு சேவைகள்
- ✦ கட்டுமானம்
- ✦ பணித்துறை

**27.** (i) வளர்வீத வரி விதிப்பு முறையில் வரியின் அடிப்படைத் தளம் அதிகரிக்கும்போது வரி விகிமும் அதிகரிக்கிறது.
(ii) ஒரு வளர்வீத வரியைப் பொறுத்தவரையில் வருமானம் அதிகரிக்கும் போது, வரி விகிதமும் அதிகரிக்கிறது. இது வளர்வீத வரி விதிப்புமுறை என்று அழைக்கப்படுகிறது.

**28.** (i) தேசியப் பாதுகாப்பு
(ii) தேசிய வளமை
(iii) நட்பு நாடுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்
(iv) உலக அமைதி அடைதல் மற்றும் ஒவ்வொரு நாட்டுடனும் அமைதியுடன் சேர்ந்திருத்தல்.
(v) பொருளாதார வளர்ச்சி

## பகுதி - III

**29.** (i) அமெரிக்க தலைமீடு மற்றும் டாலர் ஏகாதிபத்தியம்.
(ii) ஊசியிலை மரங்கள்
(iii) வர்த்தக சமநிலை
(iv) போக்ரான்
(v) ஃபோர்டு

**30.** (i) இராமநாதபுரத்தின் அரசர் செல்லமுத்து சேதுபதிக்கு 1730இல் அரச குடும்பத்தின் ஒரே பெண் வாரிசாக வேலுநாச்சியார் பிறந்தார்.'
(ii) அரச குடும்பத்தால் வளரி, சிலம்பம் போன்ற தற்காப்புக் கலைகளிலும், போர்க் கருவிகளைக் கையாளுவதற்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வளர்க்கப்பட்டார்.
(iii) மேலும் அவர் ஆங்கிலம், பிரெஞ்சு, உருது போன்ற மொழிகளில் வல்லமை பெற்றிருந்ததோடு குதிரையேற்றத்திலும், வில்வித்தையிலும் திறமையானவராக விளங்கினார்.
(iv) தனது 16வது வயதில் வேலுநாச்சியார் சிவகங்கை மன்னரான முத்துவடுகநாதரை மணந்து வெள்ளச்சி நாச்சியார் என்ற பெண்மகவையும் பெற்றெடுத்தார்.
(v) 1772இல் ஆற்காட்டு நவாபும் லெப்டினன்ட் கர்னல் பான் ஜோர் தலைமையிலான கம்பெனி படைகளும் இணைந்து காளையார்கோவில் அரண்மனையைத் தாக்கினர்.


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
www.surabooks.com



(vi) இதனால் மூண்ட போரில் முத்துவடுகநாதர் கொல்லப்பட்டார். மறைந்துவாழ்ந்த காலத்தில் வேலுநாச்சியார் ஒரு படைப்பிரிவை உருவாக்கியதோடு கோபால நாயக்கர் மட்டுமல்லாமல் ஹைதர் அலியோடும் கூட்டணியை ஏற்படுத்திக் கொண்டார்.

(vii) மேலும் தான் ஆங்கிலேயரோடு மோதுவதில் தீவிரமாக இருப்பதைத் தெளிவுபடுத்தினார். அவரது மனவுறுதியைப் பார்த்து வியந்த ஹைதர் அலி தனது திண்டுக்கல் கோட்டை படைத்தலைவரான சையதிடம் அவருக்கு வேண்டிய இராணுவ உதவிகளை வழங்குமாறு ஆணையிட்டார்.

(viii) வேலுநாச்சியார் பிரிட்டிஷாரின் ஆயுதங்கள் குவிக்கப்பட்டிருக்கும் இடத்தை அறிந்துகொள்ள உளவாளிகளை நியமித்தார்.

(ix) கோபால நாயக்கர் மற்றும் ஹைதர் அலியின் இராணுவ உதவியோடு அவர் சிவகங்கையை மீண்டும் கைப்பற்றினார்.

(x) மருது சகோதரர்களின் உதவியினால் அவர் அரசியாக முடிசூட்டிக் கொண்டார்.

(xi) இந்திய நாட்டில் பிரிட்டிஷ் காலனியாதிக்க அதிகாரத்தை எதிர்த்த முதல் பெண் ஆட்சியாளர் அல்லது அரசி என்ற பெருமை அவருக்கே உரித்தானதாகும்.

**31. முதல் உலகப்போருக்கான காரணங்கள் :**

**ஐரோப்பிய நாடுகளின் அணி சேர்க்கைகளும் எதிர் அணி சேர்க்கைகளும் :**

(i) 1900–ல் ஐரோப்பிய வல்லரசுகளில் ஐந்து அரசுகள், இரண்டு ஆயுதமேந்திய முகாம்களாகப் பிரிந்தன.

(ii) ஒரு முகாம் மையநாடுகளான ஜெர்மனி, ஆஸ்திரிய–ஹங்கேரி, இத்தாலி ஆகியவற்றைக் கொண்டிருந்தது. அவை 1882 இல் மூவர் உடன்படிக்கையை மேற்கொண்டன.

(iii) இதன்படி ஜெர்மனியும் ஆஸ்திரியாவும் பரஸ்பரம் உதவிகள் செய்து கொள்ளும். மற்றொரு முகாமில் பிரான்சும் ரஷ்யாவும் அங்கம் வகித்தன.

(iv) 1894 இல் மேற்கொண்ட உடன்படிக்கையின்படி இவ்விரு நாடுகளில் ஏதாவது ஒன்று ஜெர்மனியால் தாக்கப்படும் பட்சத்தில் பரஸ்பரம் துணை நிற்கும் என உறுதி செய்யப்பட்டது.

(v) இவ்வாறு இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய மூவரைக் கொண்ட மூவர் கூட்டு உருவாக்கப்பட்டது.

**ஆ) வன்முறை சார்ந்த தேசியம் :**

(i) தேசப்பற்றின் வளர்ச்சியோடு "எனது நாடு சரியோ தவறோ நான் அதை ஆதரிப்பேன்" என்ற மனப்பாங்கும் வளர்ந்தது.

(ii) இங்கிலாந்தின் ஆரவாரமான நாட்டுப்பற்று, பிரான்ஸின் அதி தீவிரப்பற்று, ஜெர்மனியின் வெறிகொண்ட நாட்டுப்பற்று ஆகிய அனைத்தும் தீவிர தேசியமாக போர்வெடிப்பதற்கு தீர்மானமாக பங்காற்றியது.

**இ) ஜெர்மன் பேரரசின் ஆக்கிரமிப்பு மனப்பாங்கு:**

(i) ஜெர்மன் பேரரசரான இரண்டாம் கெய்சர் வில்லியம் ஜெர்மனியே உலகத்தின் தலைவன் எனப் பிரகடனம் செய்தார்.

(ii) இந்நிலையில் ஜெர்மனியின் ஆக்கிரமிப்பு இயல்பு கொண்ட அரசியல் விவேகத்தையும் விரைவாகக் கட்டப்படும் அதன் கப்பற்படை தளங்களையும் கண்ணுற்ற இங்கிலாந்து, ஜெர்மன் கப்பற்படை தனக்கு எதிரானது என முடிவு செய்தது.

(iii) ஆகவே இங்கிலாந்தும் கப்பற்படை விரிவாக்கப் போட்டியில் இறங்கவே இரு நாடுகளுக்கிடையிலான பதற்றம் மேலும் அதிகரித்தது.

**ஈ) பிரான்ஸ் ஜெர்மனியோடு கொண்ட பகை :**

(i) பிரான்சும் ஜெர்மனியும் பழைய பகைவர்கள்.

(ii) 1871 இல் ஜெர்மனியால் தோற்கடிக்கப்பட்ட பிரான்ஸ் அல்சேஸ், லொரைன் பகுதிகளை ஜெர்மனியிடம் இழக்க நேரிட்டது.

(iii) மொராக்கோ விவகாரத்தில் ஜெர்மனியின் தலையீடு இக்கசப்புணர்வை மேலும் அதிகரித்தது.

(iv) மொராக்கோவில் பிரான்சின் நலன்கள் சார்ந்து, இங்கிலாந்து பிரான்சோடு மேற்கொண்ட ஒப்பந்தத்தை ஜெர்மனி எதிர்த்தது.

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
www.surabooks.com



**உ) பால்கன் பகுதியில் ஏகாதிபத்திய அரசியல் அதிகாரத்திற்கான வாய்ப்பு :**

(i) 1908 ஆம் ஆண்டில் துருக்கியில் ஒரு வலுவான, நவீன அரசை உருவாக்கும் முயற்சியாக இளம்துருக்கியர் புரட்சி நடைபெற்றது.

(ii) பாஸ்னியாவையும் ஹெர்சகோவினாவையும் தான் இணைத்துக் கொண்டதாக ஆஸ்திரியா அறிவித்தது. ஆஸ்திரியாவின் இவ்வறிவிப்பு செர்பியாவில் தீவிரமான எதிர்ப்பைத் தூண்டியது.

(iii) ஆஸ்திரியாவிற்கும் செர்பியாவிற்குமான இப்பகை 1914 இல் போர் வெடிக்கக் காரணமாயிற்று.

**ஊ) பால்கன் போர்கள் :**

(i) பதினெட்டாம் நூற்றாண்டின் முதல்பாதியில் தென்மேற்கு ஐரோப்பியாவில் துருக்கி வலிமை வாய்ந்த நாடாகத் திகழ்ந்தது.

(ii) பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பாதியில் துருக்கியப் பேரரசின் உறுதியற்ற அரசியல் பொருளாதாரச் சூழலைச் சாதகமாகக் கொண்டு கிரீசும் அதனைத் தொடர்ந்து ஏனைய நாடுகளும் ஒன்றன் பின் ஒன்றாகத் தங்களைத் துருக்கியின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்துக் கொண்டன.

(iii) 1912 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் பால்கன் கழகம் என்ற அமைப்பை உருவாக்கின.

(iv) இக்கழகம் முதல் பால்கன் போரில் (1912 - 1913) துருக்கிய படைகளைத் தாக்கித் தோற்கடித்தன.

(v) 1913 மே திங்களில் கையெழுத்தான இலண்டன் உடன்படிக்கையின்படி அல்பேனியா எனும் புதிய நாடு உருவாக்கப்பட்டது.

**எ) உடனடிக் காரணம் :**

(i) பால்கனில் நடைபெற்ற இந்நிகழ்வுகளில் உச்சக்கட்டம் பாஸ்னியாவிலுள்ள செராஜிவோ என்னும் இடத்தில் அரங்கேறியது.

(ii) 1914 ஆம் ஆண்டு ஜுன் 28ம் நாள் ஆஸ்திரியப் பேரரசரின் மகனான பிரான்ஸ் பெர்டினாண்டு, பிரின்ஸப் எனும் பெயரைக் கொண்ட பாஸ்னிய செர்பியனால் கொலை செய்யப்பட்டார்.

(iii) ஆஸ்திரியா இதனை செர்பியாவைக் கைப்பற்றுவதற்கான வாய்ப்பாக எண்ணியது.

(iv) ஆகஸ்டு திங்கள் முதல் நாள் ஜெர்மனி ரஷ்யாவிற்கு எதிராக போர் அறிவிப்பு செய்தது.

(v) பெல்ஜியத்தின் நடுநிலைமையை மதியாது அதனை ஜெர்மனி தாக்கவே இப்போரில் இங்கிலாந்து பங்கேற்பது கட்டாயமாயிற்று.

**32.**(அ) (i)

| | வேளாண் சார்ந்த தொழிலகங்கள் | கனிமம் சார்ந்த தொழிலகங்கள் |
|---|---|---|
| (i) | இத்தொழிலகங்கள் வேளாண் துறையிலிருந்து மூலப் பொருட்களை பெறுகின்றன. | இத்தொழிலகங்கள் உலோகம் மற்றும் உலோக மற்ற மூலப் பொருட்களைப் பயன்படுத்துகின்றன. |
| (ii) | எ.கா. பருத்தி, சணல் ஆலைகள். | எ.கா. இரும்பு எஃகு தொழிற்சாலைகள் |

(ii)

| | சாலை வழி போக்குவரத்து | இரயில் வழிப் போக்குவரத்து |
|---|---|---|
| (i) | கிராமங்களை இணைக்கும். | பெரு நகரங்களை இணைக்கும். |
| (ii) | இது குறுகிய மற்றும் நீண்ட தூரத்திற்கு பயணிகள் மற்றும் சரக்குகளை கொண்டு செல்லும். | இது அதிக அளவு பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்தை கொண்டு செல்லும். |
| | **எ.கா.** பேருந்து, லாரி, கார் போன்றவை சாலை வழியில் பயன்படுத்தப்படும் வாகனங்கள். | **எ.கா.** இரயில் மட்டுமே இருப்புப் பாதையில் செல்லும். |

(ஆ) கிழக்கு தொடர்ச்சி மலையானது ஒரு தொடர்ச்சியற்ற குன்றுகளாகும். இம்மலையானது பல இடங்களில் வங்காள கடலில் கலக்கும் ஆறுகளால் பிரிக்கப்பட்டுள்ளது.

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
www.surabooks.com



**33. ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு:**

(i) ஐக்கிய நாடுகள் சபையின் செயல்பாட்டு அங்கமாகத் திகழ்வது செயலகம் ஆகும். இதன் பொதுச்செயலாளர், பொதுச் சபையில், பாதுகாப்புச் சபையின் பரிந்துரையின்படி தேர்ந்தெடுக்கப்படுகிறார். பொதுச்செயலாளர் தனது காபினெட் உறுப்பினர்கள், ஏனைய அதிகாரிகள் ஆகியோரின் துணையோடு ஐக்கிய நாடுகள் சபையை நடத்துகிறார். பன்னாட்டு நீதிமன்றம் ஐக்கிய நாடுகள் சபையின் நீதி நிர்வாகக் கிளையாகும்.

(ii) இது நெதர்லாந்திலுள்ள தி ஹேக்கில் அமைந்துள்ளது.

(iii) பொருளாதார சமூக மன்றம் (Economic and Social Council - ECOSOC) ஐக்கிய நாடுகள் சபையின் ஐந்தாவது அங்கமாகும். ஐக்கிய நாடுகள் சபை மேற்கொள்ளும் அனைத்துப் பொருளாதாரச் சமூகப் பணிகளை ஒருங்கிணைப்பது இவ்வமைப்பின் பணியாகும்.

(iv) உலகின் பல்வேறு பகுதிகளில் வட்டாரங்களின் வளர்ச்சிக்காக (ஆசியா, பசிபிக், மேற்கு ஆசியா, ஐரோப்பா, ஆப்ரிக்கா, லத்தீன், அமெரிக்கா) பல வட்டார பொருளாதார ஆணையங்கள் செயல்படுகின்றன.

(v) அவை பொருளாதார சமூக மன்றத்தின் (ECOSOC) துணையமைப்புகளாகும். மிக வெற்றிகரமாகச் செயல்படும் இவற்றுக்கு பொருளாதார வல்லுநரான குன்னார் மிர்தால் போன்றோர் தலைமை ஏற்றிருக்கின்றனர்.

**ஐ.நா. வின் செயல்பாடுகள் :**

(i) கடந்த பல பத்தாண்டுகளில் உலகம், எதிர்கொண்ட மாறிவரும் பிரச்சனைகளுக்கு ஏற்றவாறு ஐக்கிய நாடுகள் சபை தனது செயல்பாடுகளை விரிவாக்கம் செய்துள்ளது. 1960 களில் காலனியாதிக்க நீக்கம் முக்கியப் பிரச்சனையாகும்.

(ii) மனித உரிமைகள், அகதிகள், பிரச்சனை, பருவகால மாற்றம், பாலினச் சமத்துவம் ஆகியன தற்போது ஐக்கிய நாடுகள் சபையின் செயல்பாட்டு வளையத்தினுள் உள்ளன.

(iii) ஐ.நாவின் அமைதிப்படை, உலகம் முழுவதிலும் மோதல்கள் அரங்கேறியப் பல்வேறு பகுதிகளில் அப்படை பணி செய்துள்ளது.

(iv) அதன் முக்கியப் பகுதியாக உள்ள இந்திய ராணுவம் உலகின் பல்வேறு பகுதிகளில் பணியமர்த்தப்பட்டுள்ளது.

**34.** (i) 1857ஆம் ஆண்டு நடந்த கிளர்ச்சி ஒருங்கிணைக்கப்பட்டது மற்றும் திட்டமிடப்பட்டது என்பதை நிரூபிக்க எந்தவித ஆதாரமும் இல்லை. அது தானாக நடந்தது. ஆனால் தில்லி முற்றுகை இடப்பட்ட பிறகு அண்டை மாநிலங்களின் ஆதரவைப் பெற முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

(ii) மேலும் ஒருசில இந்திய மாநிலங்களைத் தவிர இந்தக் கிளர்ச்சியில் பங்கேற்க இந்திய இளவரசர்களிடம் பொதுவாக ஆர்வம் குறைந்து காணப்பட்டது.

(iii) காலனி அரசுக்கு விசுவாசமாக அல்லது ஆங்கிலேய அதிகாரத்தை அறிந்து அச்சப்பட்டு இந்திய அரசர்களும், ஜமீன்தாரர்களும் ஒதுங்கியிருந்தனர்.

(iv) பெரும்பாலும் அவர்கள் ஐந்தாம் படையாக செயல்பட்டனர். கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களும் குறைந்த அளவே ஆயுதங்கள் மற்றும் வெடிப்பொருட்கள் கிடைத்தும் அல்லது கிடைக்காமலோ இருந்தனர்.

(v) ஆங்கில அறிவு பெற்ற நடுத்தர வகுப்பும் கிளர்ச்சிக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை.

(vi) மத்திய தலைமை இல்லாததும் கிளர்ச்சி தோல்வியடைய முக்கிய காரணமாக அமைந்தது.

(vii) தனிநபர்கள், இந்திய அரசர்கள் மற்றும் ஆங்கிலேய அரசுக்கு எதிராக சண்டையிட்ட பல்வேறு சக்திகளை ஒன்றிணைக்க பொதுவான செயல்திட்டம் ஏதுமில்லாமல் போனது.

(viii) இறுதியில் ஆங்கிலேய ராணுவம் கிளர்ச்சியை கடுமையாக ஒடுக்கியது.

(ix) ஆயுதங்கள் கிடைக்கப்பெறாமை, அமைப்பாற்றல் இன்மை, ஒழுக்கமின்மை, உதவியவர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டது ஆகிய காரணங்களால் கிளர்ச்சித் தலைவர்கள் தோல்வி அடைந்தனர்.

(x) 1857ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தில்லி ஆங்கிலேய துருப்புக்களால் கைப்பற்றப்பட்டது. சிறைபிடிக்கப்பட்ட பகதூர்ஷா பர்மாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
www.surabooks.com



**35. கிழக்கு கடற்கரைச் சமவெளி :**

(i) கிழக்கு கடற்கரைச் சமவெளி கிழக்கு தொடர்ச்சி மலைக்கும் வங்காள விரிகுடாவிற்கும் இடையே மேற்கு வங்காளம், ஒடிசா, ஆந்திர பிரதேசம் மற்றும் தமிழ்நாடு வரை நீண்டுள்ளது.

(ii) இச்சமவெளியானது கிழக்கு நோக்கி பாயும் ஆறுகளால் படிய வைக்கப்பட்ட வண்டல் படிவுகளால் உருவானது. இச்சமவெளி புதிய வண்டல் படிவுகளால் நன்கு வரையறுக்கப்பட்ட கடற்கரையைக் கொண்டது.

(iii) மகாநதிக்கும் கிருஷ்ணா நதிக்கும் இடைப்பட்டப் பகுதி வடசர்க்கார் எனவும், கிருஷ்ணா மற்றும் காவிரி ஆற்றிற்கு இடைப்பட்டப் பகுதி சோழமண்டல கடற்கரை எனவும் அழைக்கப்படுகிறது.

**மேற்கு கடற்கரை சமவெளி :**

(i) மேற்கு கடற்கரை சமவெளி மேற்கு தொடர்ச்சி மலைக்கும் அரபிக் கடலுக்கும் இடையே அமைந்துள்ளது. இது வடக்கில் உள்ள ரானா ஆப் கட்ச் முதல் தெற்கில் உள்ள கன்னியாகுமரி வரை நீண்டு, 10 கி.மீ முதல் 80 கி.மீ வரை அகலம் கொண்டதாகவுள்ளது.

(ii) இச்சமவெளி, மணற்கடற்கரை , கடற்கரை மணல்குன்றுகள், கழிமுகங்கள் , காயல்கள், எஞ்சிய குன்றுகள் மற்றும் சரளை மணல் மேடுகள் போன்ற நிலத்தோற்றங்களைக் கொண்டுள்ளது.

(iii) மேற்கு கடற்கரையின் வடபகுதி கொங்கணக் கடற்கரை எனவும், மத்திய பகுதி கனரா கடற்கரை எனவும் அழைக்கப்படுகிறது.

(iv) ஆழமில்லாத பல காயல்கள், உப்பங்கழிகள் மற்றும் டெரிஸ் போன்றவை இக்கடற்கரைப் பகுதியில் காணப்படுகின்றன.

(v) வேம்ப நாடு ஏரி இப்பகுதியில் உள்ள ஒரு முக்கியமான ஏரியாகும்.

**36.** கிராமப்புற சமுதாயம் நகர்ப்புற சமுதாயமாக மாற்றமடைவதையே நகரமயமாக்கம் என்கிறோம்.

**இந்தியாவில் நகரமயமாக்கலால் ஏற்படும் பிரச்சனைகள் :**

(i) நகர விரிவாக்கத்தை ஏற்படுத்துகிறது.
(ii) நகர்புறங்களில் மக்கள் நெருக்கடியை தோற்றுவிக்கிறது.
(iii) நகர்புறங்களில் குடியிருப்புகளின் பற்றாக்குறையை உருவாக்குகிறது.
(iv) குடிசைப் பகுதிகள் தோன்ற காரணமாக உள்ளது.
(v) போக்குவரத்து நெரிசலை அதிகப்படுத்துகிறது.
(vi) குடிநீர் பற்றாக்குறையை ஏற்படுத்துகின்றது.
(vii) வடிகால் பிரச்சனைகள் உண்டாகின்றன.
(viii) திடக்கழிவு மேலாண்மையை சிக்கலாக்குகிறது.
(ix) குற்றங்கள் அதிகரிக்க காரணமாகின்றன.

**37.** மாநில நிர்வாகத் தலைவராக ஆளுநர் பின்வரும் அதிகாரங்களையும் பணிகளையும் பெற்றுள்ளனர்.

**நிர்வாக அதிகாரங்கள் :** இந்திய அரசியலமைப்பு மாநில நிர்வாகத்தின் அனைத்து அதிகாரங்களையும் ஆளுநருக்கு வழங்குகிறது. இவற்றை ஆளுநர் நேரடியாகவோ அல்லது அவரின் கீழுள்ள அலுவலர்கள் மூலமோ செயற்படுத்தலாம். ஆளுநரே மாநிலத்தின் அரசியலமைப்புத் தலைவர். அவரது பெயராலே அனைத்து நிர்வாகமும் செய்யப்படுகின்றன.

**ஆளுநரின் நிர்வாக அதிகாரங்கள் மற்றும் பணிகளாவன:**

(i) மாநில சட்டமன்றத் தேர்தலில் பெரும்பான்மை பெறும் கட்சியின் தலைவரை முதலமைச்சராக ஆளுநர் நியமனம் செய்கிறார்.

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
www.surabooks.com



(ii) முதலமைச்சரின் பரிந்துரையின் பேரில் அமைச்சரவையின் மற்ற உறுப்பினர்களை நியமனம் செய்கிறார்.
(iii) மாநிலத்தின் அரசு வழக்கறிஞரை நியமனப் செய்து அவரது ஊதியத்தையும் நிர்ணயம் செய்கிறார்.
(iv) மாநில தலைமை தேர்தல் ஆணையரை நியமனம் செய்து அவரது பணிக்காலம் பணியின் தன்மையைத் தீர்மானிக்கிறார்.

**சட்டமன்ற அதிகாரங்கள் :**

(i) ஆளுநர் சட்டமன்ற கூட்டத்தை கூட்டவும், சட்ட மன்றத்தைக் கலைக்கவும் உரிமை பெற்றுள்ளனர்.
(ii) சட்டமன்றக் கூட்டத்தின் முதல் கூட்டத்தில் உரை நிகழ்த்துகிறார்.
(iii) நிலுவையிலுள்ள மசோதா குறித்து, சட்டமன்ற அவைகளுக்கு ஆளுநர் செய்தி அனுப்பலாம்.
(iv) ஆங்கிலோ – இந்தியன் வகுப்பினரிலிருந்து ஓர் உறுப்பினரை மாநில சட்டமன்றத்திற்கு நியமனம் செய்யலாம்.

**நிதி அதிகாரங்கள் :**

(i) ஆண்டு நிதி அறிக்கை (வரவு– செலவு) திட்டத்தை சட்டமன்றத்தில் அறிமுகம் செய்ய காரணமாகிறார்.
(ii) மாநில சட்டமன்றத்தில் மாநில நிதியமைச்சர் மூலம் துணை வரவு செலவு திட்டத்தை தேவைப்பட்டால் சமர்ப்பிக்கிறார்.
(iii) ஆளுநரின் முன் அனுமதியுடன் பண மசோதா சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்த முடியும்.
(iv) ஆளுநரின் பரிந்துரையின்றி நிதி ஒதுக்கீடு செய்ய முடியாது.

**நீதித்துறை அதிகாரங்கள் :**

(i) மாநில அட்டானி – ஜெனரலை நியமனம் செய்கிறார்.
(ii) கீழ் நீதிமன்றங்களின் நீதிபதிகளை நியமனம் செய்கிறார்.
(iii) உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளின் நியமனம் மற்றும் பதவி உயர்வினை செய்கிறார்.
(iv) ஆளுநரின் ஆலோசனையின் பேரில் குடியரசுத் தலைவர் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியை நியமனம் செய்கிறார்.

**நிர்ணயிக்கப்பட்ட அதிகாரங்கள் :**

(i) குடியரசுத் தலைவரின் ஆலோசனைக்காக ஆளுநர் ஒரு மசோதாவை நிறுத்தி வைக்க முடியும்.
(ii) மாநிலத்தில் குடியரசுத் தலைவரின் ஆட்சிக்கு ஆளுநர் பரிந்துரை செய்கிறார்.
(iii) சட்டமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பின் பொழுது தோல்வியுறும் அமைச்சரவையை ஆளுநர் கலைக்க முடியும்.
(iv) மற்றும் சட்டமன்றத்தில் அமைச்சரவை பெரும்பான்மையை இழந்தால், ஆளுநர் அமைச்சரவையை கலைக்க முடியும்.

**அவசர கால அதிகாரங்கள் :**

(i) மாநில அரசு அரசியலமைப்பு விதிகளுக்கேற்ப செயல்படவில்லை என்று ஆளுநர் உறுதியாக நம்பினால் அரசியலமைப்பு சட்டம் பிரிவு 356ன் கீழ் மாநில அரசை கலைக்க குடியரசு தலைவருக்கு பரிந்துரை செய்யலாம்.
(ii) ஆளுநர் குடியரசுத் தலைவரின் பிரதிநிதியாக மாநிலத்தை நிர்வாகம் செய்கிறார்.

**38.** (i) தேசிய நலனைப் பேணுதல்.
(ii) உலக அமைதியை எய்துதல்.
(iii) ஆயுதக் குறைப்பு.
(iv) பிற நாடுகளுடன் நல்லுறவை வளர்த்தல்.
(v) அமைதியான வழிகளில் பிரச்சனைகளைத் தீர்த்தல்.
(vi) அணிசேராக் கொள்கையின்படி சுதந்திரமான சிந்தனை மற்றும் செயல்பாடு.
(vii) சர்வதேச விவகாரங்களில் சமத்துவம்.
(viii) காலனியாதிக்கம், ஏகாதிபத்தியம், இனப்பாகுபாடு ஆகியவற்றிற்கு எதிரான நிலைப்பாடு.

**39. உலகமயமாக்கலின் சவால்கள் :**

(i) உலகமயமாக்கலில் நன்மைகள் அனைத்து நாடுகளுக்கும் தானாக கிடைப்பதில்லை.
(ii) வளர்ந்து வரும் உலகில் உலகமயமாக்கல், உறுதியற்ற தன்மைக்கு வழிவகுக்கும் என்பது அச்சத்திற்குரியதாகும்.

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

www.surabooks.com



(iii) உலகமயமாக்களினால் உலகளாவிய போட்டி அதிகரித்த தொழில்துறை உலகில், ஊதியங்கள், தொழிலாளர் உரிமைகள், வேலைவாய்ப்பு நடைமுறைகள் ஆகியவற்றை அடிமட்டத்திற்கு கொண்டு செல்ல இது வழிவகுக்கும்.

(iv) இது உலகளாவிய சமத்துவமின்மைக்கு வழிவகுக்கிறது.

(v) உலகமயமாக்கலால் குழந்தை தொழிலாளர் முறை மற்றும் அடிமைத்தனம் போன்ற நடவடிக்கைகள் அதிகரித்துள்ளது.

(vi) மக்கள் அதிகமாக துரித உணவுகளை உட்கொள்கிறார்கள். இதனால் உடல்நலக் குறைவு மற்றும் நோய் பரவுதலுக்கு இது வழி வகுக்கிறது.

(vii) உலகமயமாக்கல் சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

**40. முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:**

**உள்ளீடுகளின் உற்பத்தித் திறனை உயர்த்துதல் :**

இந்தியாவின் விவசாயக் கொள்கையின் முக்கியமான நோக்கமானது வீரியவித்து விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள், நீர்ப்பாசன திட்டங்கள் போன்ற வாங்கிய உள்ளீடுகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதாகும்.

**ஒரு ஹெக்டேருக்கு மதிப்பு கூட்டப்பட்டவை :**

வேளாண் கொள்கையானது பொதுவாக வேளாண்மையின் உற்பத்தித்திறனை உயர்த்துவதன் மூலமும், குறிப்பாக சிறிய மற்றும் ஓரளவு வைத்திருக்கும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதன் மூலமும் ஒரு ஹெக்டேருக்கு மதிப்பு கூட்டப்பட்டதை அதிகரிப்பதாகும்.

**ஏழை விவசாயிகளின் நலன்களைப் பாதுகாத்தல் :**

ஏழை விவசாயிகளுக்கு நிறுவன கடன் ஆதரவை விரிவுபடுத்துதல், நில சீர்திருத்தங்கள் செய்தல், இடைத்தரகர்களை ஒழித்தல் போன்றவற்றின் மூலம் ஏழை மற்றும் குறு விவசாயிகளின் நலனைப் பாதுகாப்பதே இதன் நோக்கமாகும்.

**விவசாயத் துறையை நவீனமயமாக்குதல் :**

விவசாய நடவடிக்கைகளில் நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல், மற்றும் உயர்ரக விதைகள் (HYV), உரங்கள் போன்ற மேம்பட்ட விவசாய உள்ளீடுகளைப் பயன்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

**சுற்றுச்சூழல் சீரழிவு :**


இந்தியாவின் விவசாயக் கொள்கை இந்திய விவசாயத்தின் அடித்தளத்தின் சுற்றுச்சூழல் சீரழிவை சரி செய்யும் மற்றொரு நோக்கத்தையும் கொண்டுள்ளது.

**அதிகாரத்துவ தடைகளை நீக்குதல் :**

விவசாயிகளின் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் சுய உதவி நிறுவனங்கள் மீதான அதிகாரத்துவ தடைகளை நீக்குவதற்கு இந்த கொள்கை மற்றொரு குறிக்கோளை அமைத்துள்ளது. இதனால் அவர்கள் சுதந்திரமாகச் செயல்பட முடியும்.

**41. 1920 முதல் 1940 வரையிலான காலக்கோட்டு நிகழ்வுகள்**

அளவுகோல்
(1 அலகு = 5 ஆண்டுகள்)







Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
www.surabooks.com



**42.**




orders@surabooks.com PH: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
www.surabooks.com



## பகுதி - IV

**43.**(அ) (i) ஹோ சி மின் 1890இல் டோங்கிங்கில் பிறந்தார். தனது 21 ஆவது வயதில் அவர் ஐரோப்பா சென்றார். லண்டன் உணவுவிடுதியொன்றில் சமையல் கலைஞராய்ப் பணியாற்றிய பின் அவர் பாரிஸ் சென்றார்.

(ii) பாரிஸ் அமைதி மாநாட்டில் வியட்நாமின் சுதந்திரத்திற்காக ஆதரவு திரட்டினார். தினசரிகளில் அவர் எழுதிய கட்டுரைகளும் குறிப்பாக "விசாரணையில் பிரெஞ்சு காலனியாதிக்கம் எனும் சிற்றேடு அவரை நன்கறியப்பட்ட வியட்நாமிய தேசியவாதி ஆக்கியது.

(iii) 1921இல் ஹோ சி மின் பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கியவர்களில் ஒருவராக இருந்தார். இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் அவர் மாஸ்கோ சென்று புரட்சியின் நுட்பங்களைக் கற்றார்.

(iv) 1925இல் 'புரட்சிகர இளைஞர் இயக்கம்' எனும் அமைப்பை நிறுவினார்.

**வியட்மின் கட்சியின் உதயம் :**

(i) இந்தோ – சீனாவில் இருந்த அரசியல் கட்சிகளில் வியட்நாம் தேசியக் கட்சியே முக்கியமானது. 1927இல் உருவாக்கப்பட்ட இக்கட்சி மக்கள் தொகையில் பணக்காரர்களையும் நடுத்தரப்பிரிவு மக்களையும் கொண்டிருந்தது. 1929இல் வியட்நாம் வீரர்கள் இராணுவப்புரட்சிசெய்தனர்.

(ii) பிரெஞ்சு கவர்னர் ஜெனரலைக் கொலை செய்வதற்கான முயற்சியும் தோல்வி அடைந்தது. இதனைத் தொடர்ந்து கம்யூனிஸ்ட்களின் தலைமையில் மிகப்பெரும் விவசாயிகளின் புரட்சியும் நடைபெற்றது.

(iii) இப்புரட்சி ஒடுக்கப்பட்டதைத் தொடர்ந்து 'வெள்ளை பயங்கரவாதம் (White Terror)' என்பது அரங்கேறியது. புரட்சியாளர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர்.

(iv) ஹோ சி மின்னும் அவருடைய தோழர்களும் வியட்நாமின் விடுதலையை முன்னெடுத்தனர். 1941 ஜனவரி திங்கள் எல்லையைக் கடந்து வியட்நாம் வந்த அவர்கள் 'வியட்நாம் விடுதலை சங்கம்' அல்லது வியட்மின் எனும் அமைப்பை நிறுவினர். இது தனித்தன்மை வாய்ந்த வியட்நாமிய தேசியத்திற்குப்புதிய அழுத்தத்தைக் கொடுத்தது.

**(ii)** (i) வள்ளலார் எனப் பிரபலமாக அறியப்பட்ட, இராமலிங்க சுவாமிகள் அல்லது இராமலிங்க அடிகள் (1823 - 1874) சிதம்பரத்திற்கு அருகேயுள்ள மருதூர் எனும் கிராமத்தில் பிறந்தார்.

(ii) முறையான கல்வியை அவர் பெற்றிராவிட்டாலும் அளப்பரியப் புலமையைப் பெற்றிருந்தார்.

(iii) உயிர்களிடையே நம்பிக்கை, இரக்கம் எனும் பிணைப்புகள் இருக்க வேண்டுமென்றார்.

(iv) அவர் தன்னுடைய அன்பையும் இரக்கத்தையும் செடிகொடிகள் உட்பட அனைத்து உயிரினங்களிடமும் காட்டினார். இதை அவர் ஜீவகாருண்யம் என்றார் .

(v) 1865இல் சமரச வேத சன்மார்க்க சங்கம் எனும் அமைப்பை நிறுவினார். பின்னர்அது சமரச சுத்த சன்மார்க்க சத்ய சங்கம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

(vi) 1866இல் தென்னிந்தியாவில் ஏற்பட்ட கொடிய பஞ்சத்தைக் கணக்கில் கொண்டு 1867இல் சாதி எல்லைகளைத் தாண்டி அனைத்து மக்களுக்குமான இலவச உணவகத்தை வடலூரில் நிறுவினார். அவர் இயற்றிய ஏராளமான பாடல்கள் திருவருட்பா என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டன.

(ஆ) (i) முந்தைய இந்திய வருகைகளின் போது காந்தியடிகள் தான் சந்தித்த கோபால கிருஷ்ண கோகலே மீது பெரும் மரியாதை கொண்டு அவரையே தமது அரசியல் குருவாக ஏற்றார் . அவரது அறிவுரையின்படி, அரசியலில் ஈடுபடுமுன் நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் காந்தியடிகள் பயணம் மேற்கொண்டார்.

**(அ) சம்பரான் சத்தியாகிரகம்:**

(i) பீகாரில் உள்ள சம்பரானில் 'தீன் காதியா' முறை பின்பற்றப்பட்டது.

(ii) இந்த சுரண்டல் முறையில் இந்திய விவசாயிகள் தங்களின் நிலத்தின் இருபதில் மூன்று பங்கு பகுதியில் அவுரி (இண்டிகோ) பயிரிட வேண்டும் என்று ஐரோப்பியப் பண்ணையாளர்கள் அவர்களைக் கட்டாயப்படுத்தினர்.

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
www.surabooks.com



(iii) சம்பரானில் இண்டிகோ பயிரிட்ட ஐரோப்பியப் பண்ணையாளர்கள் நீலச்சாயம் பயிரிடும் கடமையிலிருந்து விவசாயிகளை விடுவிக்கும் தேவையை உணர்ந்து அந்த நிலைமையை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள விரும்பினார்கள்.

(iv) இந்தக் கடமையிலிருந்து விவசாயிகளை விடுவிக்கும்பொருட்டு சட்டத்துக்கு புறம்பான நிலுவைத் தொகைகளை வசூலித்தோடு வாடகையையும் அதிகரித்தார்கள் . எனவே எதிர்ப்பு வெடித்தது.

(v) சம்பரான் சத்தியாகிரகத்தின் வெற்றியை அடுத்து 1918இல் அகமதாபாத் மில் வேலைநிறுத்தம், 1918இல் கேதா சத்தியாகிரகம் ஆகியன காந்தியடிகளை ஒரு மக்கள் தலைவராக உருவாக்கின.

(ஆ) **ரௌலட் சத்தியாகிரகமும் ஜாலியன்வாலாபாக் படுகொலையும் :**

(i) இந்தியர்களுக்கு உண்மையில் அதிகாரங்களை பரிமாற்றம் செய்யாததால் 1919ஆம் ஆண்டின் இந்திய அரசுச்சட்டம் ஏமாற்றத்தை அளித்தது.

(ii) மேலும், அரசானது போர்க்காலக் கட்டுப்பாடுகளை நிரந்தரமாக விரிவுபடுத்தி அமல்படுத்தத் தொடங்கியது. பிடி உத்தரவு இல்லாமல் கைது நடவடிக்கை, விசாரணை இல்லாமல் சிறையிலடைப்பது என காவல் துறையினருக்கு அதீத அதிகாரங்களை ரௌலட் சட்டம் வழங்கியது.

(iii) இந்தச் சட்டத்தை 'கருப்புச் சட்டம்' என்றழைத்த காந்தியடிகள் அதனை எதிர்த்து நாடு தழுவிய சத்தியாகிரகப் போராட்டத்துக்கு 1919 ஏப்ரல் 6இல் அழைப்புவிடுத்தார்.

**ஜெனரல் டயரின் கொடுங்கோன்மை :**

(i) அமிர்தசரஸில் உள்ள ஜாலியன்வாலா பாக்கில் 1919 ஏப்ரல் 13ஆம் நாள் ஒரு பொதுக்கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ii) இந்தக் கூட்டம் பற்றி அறிந்தவுடன் அந்த இடத்தை பீரங்கி வண்டி மற்றும் ஆயுதமேந்திய வீரர்களுடன் ஜெனரல் ரெஜினால்டு டயர் சுற்றி வளைத்தார்.

(iii) உயர்ந்த மதில்களுடன் அமைந்த அந்த மைதானத்துக்கு இருந்த ஒரே வாயில் பகுதியை ஆக்ரமித்த ஆயுதமேந்திய வீரர்கள் எந்த வித முன்னெச்சரிக்கையுமின்றி கண்மூடித்தனமாக சுடத் தொடங்கினார்கள்.

(iv) துப்பாக்கிகளில் குண்டுகள் தீரும் வரை தொடர்ந்து 10 மணித்துளிகளுக்கு இந்தத் துப்பாக்கிச்சூடு நிகழ்ந்தது. இந்தக் கொடுமைகள் இந்தியர்களை கொதித்தெழச்செய்தது.

(viii) இரபீந்திரநாத் தாகூர் வீரத்திருமகன் (knighthood) என்ற அரசுப்பட்டத்தை திருப்பிக் கொடுத்தார். கெய்சர் –இ–ஹிந்த் பதக்கத்தை காந்தியடிகள் திருப்பிக்கொடுத்தார்.

**(இ) கிலாபத் இயக்கம் :**

(i) 1918இல் முதலாவது உலகப்போர் முடிவுக்கு வந்தது. இசுலாமிய மதத்தலைவர் என உலகம் முழுவதும் போற்றப்பட்ட துருக்கியின் கலிபா கடுமையாக நடத்தப்பட்டார்.


(ii) அவருக்கு ஆதரவாக தோற்றுவிக்கப்பட்ட இயக்கமே கிலாபத் இயக்கம் என்றழைக்கப்பட்டது. 1920 ஜுன் 9இல் அலகாபாத்தில் கூடிய கிலாபத் குழுவின் கூட்டம் காந்தியடிகளின் அகிம்சை மற்றும் ஒத்துழையாமை இயக்கத்தை ஏற்றுக்கொண்டது. ஒத்துழையாமை இயக்கம் 1920 ஆகஸ்டு முதல் நாள் தொடங்கியது.

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
www.surabooks.com



**44.** (அ)





orders@surabooks.com PH: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
www.surabooks.com



(ஆ)




orders@surabooks.com PH: 9600175757 / 8124201000

★ ★ ★

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: padasalai.net@gmail.com